முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.17.02.2025

அசல் வழக்கு எண். 128/2023

வா.சா.ஆ.1 ஞானராஜன்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1) நான் பிராதில் குறிப்பிட்டுள்ள வாய்மொழி பாகவஸ்து குறித்து பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எந்த ஆண்டு மாதம் தேதி நடைபெற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் என் அண்ணனுக்கும் எத்தனை ஆண்டுகாலமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் 7, 8 ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது. என்ன பிரச்சனை என்றால் சொத்து தகராறு. இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எனக்கும் என் அண்ணனுக்கும் என்ன தகராறு என்றால் என் அண்ணன்அவர் மனைவி பெயருக்கு ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்டார். நான் வழக்குப்பட்டிகை சொத்தை காட்டும் புகைப்படம் அல்லது வீடியோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) வழக்குப்பட்டிகை சொத்திற்கு கிழக்கே ஒரு ரோடு உருவாக்கப்பட்டது என்றால் திசை சரியாக தெரியவில்லை. சொத்திற்கு முகப்பே ஒரு ரோடு உள்ளது. பெருமாள்புரம் புரவு சொத்தில் நிறைய பாதைகள் உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பாதையினை உருவாக்க பெருமாள்புரம் புரவில் உள்ள சொத்து உரிமையாளர்கள் அவரவர் வயலில் இருந்து இடம் விட்டுக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த வழிப்பாதை உருவாக்கியது சம்பந்தமாக ஒரு அமைப்பு உள்ளது என்றால் முன்னர் இருந்தது தற்போது உள்ளதா என தெரியவில்லை. அந்த பெருமாள்புரம் புரவில் வழிப்பாதை அமைக்க ஒரு வரைபடம் உண்டு என்றால் முன்னர் ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த வரைபடத்தில் ஒவ்வொரு இடத்துக்காரரும் ரோட்டிற்காக எத்தனை சதவீத இடம் விட்டுக்கொடுக்க வேண்டும் என சொல்லப்பட்டிருந்தது என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

3) எங்கள் இடத்திற்கு கிழக்கு பக்கம் தெற்கில் இருந்து துவங்கி வடக்கு பக்கமாக வடசேரி பேருந்து நிலையத்தினை சென்று அடைகிறது என்றால் திசை தெரியவில்லை ஒரு சாலை எங்கள் இடத்திற்கு முகப்பிலிருந்து சென்று மற்றொரு

ரோட்டிற்கு சென்று அந்த ரோடு வடசேரி பேருந்து நிலையத்தை அடையும். பட்டிகை சொத்திற்கு தெற்கே ஒரு ரோடு கிழக்கில் இருந்து மேற்காக செல்கிறது என்றால் ரோடு கிடையாது இடம் தான் உள்ளது. வசந்தம் மருத்துவமனை மருத்துவர் அஜிதா வீடு எனக்குதெரியும். அவர் வீட்டிற்கு எங்கள் இடத்தின் தெற்கு பக்கம் சாலை வழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால் எனக்கு திசை தெரியாது எங்கள் இடத்திற்கு முன்பு உள்ள சாலை வழியாக செல்ல வேண்டும்.

4) அந்த சாலை பட்டா இடத்தில் தான் உருவாக்கப்பட்டவை என்றால் சரிதான். அஜிதா மருத்துவர் வீடு கட்டி எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. எங்கள் இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சாலை மண் சாலை ஆகும். கிழக்கு பக்கம் உள்ள சாலை தார் சாலை ஆகும். அந்த மண் சாலை மற்றும் தார் சாலை அமைக்க எங்கள் இடத்தில் எத்தனை சதவீதம் இடம் விட்டுக்கொடுக்கப்பட்டது என்றால் அளந்து பார்த்தால்தான் தெரியும். அந்த சாலையின் அகலம் எவ்வளவு என்றால் நியாபகம் இல்லை அளந்துதான் பார்க்க வேண்டும். சாலையை தொட்டு எங்கள் இடத்தில் வேலி இல்லை மதில் சுவரும் இல்லை. எங்கள் சொத்திற்கு கிழக்கே வேலி மற்றும் மதில் சுவர் இல்லை.

5) பி பட்டிகை சொத்தில் ரோட்டிற்கு கொடுத்தது போக பாக்கி எவ்வளவு இடம் உள்ளது என்றால் அளந்துதான் பார்க்க வேண்டும். பி பட்டிகை சொத்திற்கு மேற்கே காலி மனை உள்ளது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் 0.15.78.236 ெஹக்டேர் விகிதம் என மொத்த இடத்தின் அளவு சொல்லப்பட்டுள்ளது. 0.15.78.236 ெ ஹக்டேர் ஆனது மொத்தம் எத்தனை செண்ட் என்றால் கணக்கிட்டால்தான் தெரியும். வா.சா.ஆ.4 சிட்டாவில் வாதி மற்றும் முதல் பெயர் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என் மனைவியின் பெயர் தவிர ஏனைய பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. 1998 ம் ஆண்டு நானும் என் அண்ணன் 1998 ம் ஆண்டு சேர்ந்து சொத்தை கிரையம் வாங்கியபோது சொத்தின் நான்கு எல்லைகளிலும் வயல் வரப்பு இருந்தது. வழக்குச்சொத்து எத்தனை ஆண்டுகளாக பயிர் செய்யப்படாமல் இருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை.

6) வழக்கு ஏ பட்டிகை சொத்தில் நான் எப்போதாவது பயில் செய்தேனா என்றால் நான் காய்கறி விவசாயம் செய்தேன் எந்த ஆண்டு என்று நியாபகம் இல்லை. அவ்வாறு பயிர் செய்ததாக சொல்வது நானும் என் அண்ணனும் சேர்ந்து வாங்கிய பிறகா என்றால் ஆம். நானும் என் அண்ணனும் சேர்ந்து வாங்கிய சொத்து ஆக்கிரமிக்கப்பட்டது விவரம் எனக்கு தெரியுமா என்றால் யாரும் ஆக்கிரமிக்கவில்லை அது குறித்து என் அண்ணன் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது என் அண்ணன் புகார் கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் பெருமாள்புரம் புறவு என்ற அமைப்பிற்கு ஒரு கடிதம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் பெருமாள்புரம் புறவு அமைப்பினருடன் காவல் நிலையம் சென்றேன் என்றால் தவறு.

7) வழக்கு ஏ பட்டிகை சொத்தில் தற்போது ஒரு ஆக்கர் கடைக்காரர் பழைய பொருட்களை போட்டுள்ளார் என்றால் எனக்கு அவ்வாறு தெரியவில்லை. வழக்கு ஏ பட்டிகை சொத்தை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்தால் அது தெரியும் என்றால் நீதிமன்றம் சொன்னால் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யலாம். ஏ பட்டிகை சொத்தின் நீளம் அகலம் தற்போது எவ்வளவு என அளந்து பார்க்க வேண்டும். தற்போது எவ்வளவு ஏரியா என்பதையும் அளந்துதான் பார்க்க வேண்டும். பி பட்டிகை சொத்தின் நீளம் அகலம் எவ்வளவு என அளந்துதான் பார்க்க வேண்டும். நான் என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய சமயம் அளந்து பார்த்தேனா என்றால் நியாபகம் இல்லை. நான் வாய்மொழி பாகம் என சொல்வதற்கு முன்பு பட்டிகை சொத்தை அளந்து எல்கை கல் போட்டு பிரித்தோமா என்றால் நியாபகம் இல்லை.

8) நான் என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை நான் என் சகோதரருடன் நேரடியாக பேசினேன். அவ்வாறு எப்போது பேசினேன் என்றால் என் மனைவி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பு பேசினேன். அதற்கு முன்பு எனக்கும் என் சகோதரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு எங்களிடையே நடைபெற்றது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்திருந்தார் இருந்தாலும் பேசிக்கொள்வார். எனக்கு எதிராக என் சகோதரர் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் இந்த செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பிற்பாடு வேறு இடங்கள் சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தார். எனக்கும் என் அண்ணனுக்கும் 2005ம் ஆண்டு காலகட்டத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியபோது அதில் என் அண்ணனை சாட்சி கையொப்பத்திற்கு கூப்பிடவில்லை என்றால் அவரை கூப்பிட்டேன் அவர் வேண்டாம் தம்பி நான் பிரச்சனை செய்யமாட்டேன் என்று சொன்னார். வழக்கு பி பட்டிகை சொத்து கிழக்கு பக்கம் உள்ள தார் சாலைக்கு அருகாமையில் உள்ளது என்றால் சரியல்ல தார் சாலை ஒரு 150, 200 அடி தள்ளி உள்ளது.

9) ஏ பட்டிகை சொத்தை பிரித்து காட்ட ஏதாவது எல்லை கல்கள் நாட்டப்பட்டுள்ளதா என்றால் கல் இருக்கும். அவ்வாறு கல் இருப்பதாக காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் சரிபாதி என் அண்ணனுக்கு இருக்கும். அந்த ரோட்டிற்கு எடுத்ததற்கு பின்பு எவ்வளவு செண்ட் உண்டு என அளந்தால்தான் தெரியும். எனக்கு ரோட்டிற்கு எடுத்தது போக எவ்வளவு சொத்து உள்ளது என அளந்துதான் பார்க்க வேண்டும். நான் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிய பின் தனிப்பட்ட வாங்க ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் முயற்சி செய்யவில்லை. தற்போது அந்த இடத்தை பார்த்தால் இருவர் இடமும் ஒரே கிடப்பாகத்தான் தெரியும் என்றால் சரிதான். இருவர் இடமும் ஒரே கிடப்பாக இருப்பதால் நான் எவ்விதமான உட்பிரிவிற்கும் மனு செய்யவில்லை என்றால் சரியல்ல.

10) நான் சொல்வதுபோல் எவ்விதமான வாய்மொழி பாகமும் நடைபெறவில்லை என்றாலும் அதனால்தான் சொத்து ஒரே கிடப்பாக உள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் வாய்மொழி பாகம் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு நடைபெற்றிருந்தால் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் அதன் தேதி விவரங்கள் குறிப்பிட்டிருப்போம் என்றாலும் அவ்வாறு நடைபெறததால் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் பி பட்டிகை சொத்து கிடப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் விலை மதிப்புள்ள சொத்தை அபகரிக்க வேண்டி என் மனைவி பெயரில் ஒரு போலியான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் சொத்தின் அமைப்பை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமிக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இருவருக்கும் உரிமைப்பட்ட சொத்து குறித்து தன்னிச்சையாக என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியது பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் என் மனைவி பெயருக்கு எழுதிய செட்டில்மெண்ட் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் உண்மைக்கு புறம்பான விவரங்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு முன்பு என் அண்ணனிடம் சொன்னேன் என்பதும் என் அண்ணன் ஒப்புக்கொண்டார் என்பதும் தவறு என்றாலும் நான் அவ்வாறு என் அண்ணனிடம் சொல்லக்கிடையாது என்றாலும் சரியல்ல.

11) என் அண்ணன் அவர் பாகம் குறித்து இரண்டாவது பிரதிவாதி பெயரில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் வா.சா.ஆ.3 கிரைய உடன்படிக்கையை மொத்த சொத்தில் பிரிபடாத பாகம் என தெரிவித்து உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளார். வா.சா.ஆ.3 கிரைய உடன்படிக்கையில் நான்கு எல்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆம் அது தவறுதலாக உள்ளது. வா.சா.ஆ.3 ஒப்பந்தம் என் அண்ணன் அவருக்கு உரிமைப்பட்ட சொத்து குறித்துதான் ஏற்படுத்தியுள்ளார் என்றால் மொத்த சொத்தில் வில்லங்கம் செய்ய வேண்டும் என ஏற்படுத்தியுள்ளார். அவருக்கு உரிமைப்பட்ட சொத்து சம்பந்தமாகத்தான் வா.சா.ஆ.3 ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

12) 1ம் பிரதிவாதி யார் என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். 2ம் பிரதிவாதி யார் என்றால் சாட்சி தற்போது 1ம் பிரதிவாதி ஞானப்பால் என்றும் 2ம் பிரதிவாதி ஞானப்பால் மனைவி என்றும் தெரிவித்தார். எங்களிடையே அசல் வழக்கு எண்.538/2011 மற்றும் அசல் வழக்கு எண்.23/2012 வழக்குகள் ஜகோவா எக்ஸிம் பிரைவேட் லிமிடெட் சம்பந்தமாக நடைபெற்றது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.23/2012 தற்போதும் நடைபெற்று வருகிறது. எங்களிடையே பல வழக்குகள் நடைபெற்றதால் என் அண்ணன் சம்மதம் தெரிவித்தார் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் என்னிடம் சுமார் 30, 40 இலட்சம்

ரூபாய் வாங்கிக்கொண்டு சம்மதம் தெரிவித்தார். அவ்வாறு 30, 40 இலட்சம் வாங்கிக்கொண்டு சம்மதம் தெரிவித்தார் என நான் பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிராது, செட்டில்மெண்ட் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் செட்டில்செண்ட் ஆவணத்திற்கு 1ம் பிரதிவாதி சம்மதம் தெரிவித்ததாக சொல்லவில்லை என்றால் வாக்கால் பாகம் என சொல்லப்பட்டுள்ளது. வாக்கால் பாகம் என சொல்லப்பட்டது சம்மதம் தெரிவித்ததாக அர்த்தம் குறிப்பாக சம்மதம் தெரிவித்ததாக சொல்லப்படவில்லை.

13) பட்டிகை சொத்தில் ரூ.5,00,000/- செலவழித்து பராமரித்ததாக சொன்னது என்ன செலவு என்றால் சொத்து ஆதியில் வயல் ஆகும். அது ஐந்தரை அடி அளவிற்கு மண் நிரப்பி உயர்த்தி செலவு செய்ததாகும். என் பாகச்சொத்திற்கு மட்டும் மண் அடித்து உயர்த்தியது ஆகும். அவ்வாறு ஐந்து இலட்சம் செலவு செய்ததை காட்ட தாக்கல் செய்யவில்லை. அதற்கு ஆவணம் தாக்கல் செய்யலாமா என்றால் மண் கொட்டிய சமயங்களில் கொஞ்சம் கொஞ்சமாக ரூபாய் கொடுத்திருந்தோம் அதனால் ஆவணம் தாக்கல் செய்ய முடியாது. நான் சொன்னதுபோல் ரூ.5,00,000/- செலவு செய்யவில்லை என்றாலும் மண் கொட்டவில்லை என்றாலும் சரியல்ல. நான் என் அண்ணன் ரூ.30,40 இலட்சம் கொடுத்ததாக சொல்வதை காட்டவும் எனக்கு அவ்வாறு தொகை கொடுக்க வருமானம் உள்ளதை காட்டவும் ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் தாக்கல் செய்யலாம்.

14) என்னிடம் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றாலும் அதனால்தான் நீதிமன்றம் உத்தரவிட்டால் தாக்கல் செய்யலாம் என சொல்கிறேன் என்றால் நான் என் அண்ணனின் மீதுள்ள பாசத்தினால் தொகை கொடுத்தேன் அவ்வாறு தொகை கொடுத்தற்கு எந்த ஆவணமும் இல்லை. 02.07.2023 அன்று என் கைவச அனுபவத்தை இடஞ்சல் செய்ததாக சொல்லியுள்ளது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீஸ் புகார் கொடுக்கவில்லை பிரதிவாதிகள் இருவரும் வாய்தகராறு செய்தார்கள். நான் சொன்னதுபோல் 02.07.2023 அன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அதனால்தான் நான் வாய் தகராறு என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு அவருக்கு உரிமைப்பட்ட பாதி பாகம் சம்பந்தமாக கிரைய

உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் அதனை ரத்து செய்யக்கேட்டு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

15) நான் பி பட்டிகை சொத்தில் கைவச அனுபவத்தில் வைத்திருப்பதாக காட்ட எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பி பட்டிகை சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்து வாதிக்கு தனிப்பட்ட உரிமையும் கைவசமும் கிடையாது என்றாலும் அது கூட்டு உரிமை மற்றும் கைவசத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 செல்லத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு கோராமல் வழக்குப்பரிகாரம் நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எல்கைகள் தவறானவை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சரியான நபர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வருவாய்த்துறை ஆவணங்கள் வருவாய்த்துறை அலுவலரை கைவசப்படுத்தி பெறப்பட்டவை என்பதால் அது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்களில் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளதா என்றால் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயர்கள் உள்ளது.